JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 9 Witness for Prosecution

CC No. 170/2022 Crime No. 184/2022 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-9-கிருஷ்ணமூர்த்தி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 07th day of October 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18/08/ 2022-ம் தேதியன்று பவானி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது ஆப்பக்கூடல் காவல் நிலையம், பவானி வட்டத்திற்கு உட்பட்டது என்பதால் ஆப்பக்கூடல் காவல் நிலையத்திற்கும் காவல் ஆய்வாளராக பொறுப்பு வகித்து வந்தேன். 18/08/2022 ஆம் தேதியன்று பகல்15.30 மணிக்கு அத்தாணி கருப்பகவுண்டர்புதூர், கூரைப்பாளையத்தார் தோட்டத்தில் வசிக்கும் சக்திவேல் மனைவி விஜயலட்சுமி என்பவர் ஆப்பக்கூடல் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை காவல் உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் பெற்று ஆப்பக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.184 /2022, சட்டப்பிரிவுகள் இதச 451, 392 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்த வழக்குக் கோப்பினை நான் பெற்று, அன்று பகல் 17.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று அன்று மாலை 17.00 மணிக்கு சாட்சிகள் மகேஷ் பிரபு மற்றும் செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.07 07:06:33 +0530

பின்னர் சம்பவயிட சாட்சிகள் விஜயலட்சுமி, சக்திவேல், வேணி, பிரபாகரன், மகேஷ் பிரபு மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 20/08/2022-ம் தேதியன்று மாலை 18-45 மணிக்கு கோபி ரோட்டில், அத்தாணி மூன்று ரோடு அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது கோபி பக்கம் இருந்து TN 36 AF 8488 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்த பின்னர் விவரம் கேட்டு தெரிந்த எதிரி கார்த்திக் என்பவரை பிடித்து விசாரித்தபோது அவர் வழக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டதால் கைத்துக்கான காரணம் கூறி சட்டமுறைப்படி இரவு 07.00 மணிக்கு சாட்சிகள் ரமேஷ் மற்றும் யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் கைது செய்தும், எதிரியானவர் 07.15 மணிக்கு மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரியானவர் அவரது பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த கோபி முத்தூட் பைனான்சில் அடகு வைத்திருந்த அடமான இரசீது, பணம் ரூ.74,000/- மற்றும் கொள்ளை சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 36 AF 8488 என்ற இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆஜர் செய்ததை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் இரவு 20.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜ தயார் செய்து கைப்பற்றினேன்.

பின்னிட்டு எதிரி சம்பவயிடத்தை அடையாளம் காட்டியதை பார்வையிட்டும் 22.30 மணிக்கு நிலையம் வந்தேன். பின்னர் சாட்சிகள் ரமேஷ் மற்றும் யுவராஜ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21/08/2022-ம் தேதியன்று எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க வழிக் காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட முத்தூட் பின்கார்ப் இரசீது அ.சா.ஆ.16 ஆகவும், பணம், இரசீது மற்றும் இருசக்கர வாகனம் கைப்பற்றியதற்கான அதற்கான படிவம் 91 அ.சா.ஆ.17 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

24/082022-ம் தேதியன்று எதிரி கார்த்திகை போலீஸ் காவலில் (Custody) எடுக்க நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தும் 27/08/2022 ஆம் தேதியன்று CMP.No.673/2022 ன் படி ஒரு நாள் போலீஸ் காவலில் நீதிமன்றத்தில் எதிரியை பெற்றும் 11.45 மணிக்கு ஆப்பக்கூடல் காவல் நிலையம் சென்றோம். 12.15 மணிக்கு எதிரியானவர் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் மேகலா மற்றும் கிராம உதவியாளர் கோபால் ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தன் அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை கோபிக்கு அழைத்துச் சென்றால் கருப்பக்கவுண்டபுதூரில் வீட்டில் தனியாக இருந்த ஒரு பெண்ணிடம் 7-½ பவுன் தங்க தாலிக் கொடியை பிடுங்கிக் கொண்டு அந்த தங்க தாலிக் கொடியை அடமானம் வைத்து ரூ. 1 - ½ பணம்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.07 07:06:41 +0530

பெற்ற முத்தூட் பின்கார்ப் லிமிடெடை அடையாளம் காட்டியும், நான் அடமானம் வைத்த தங்க தாலிக்கொடியையும் அடையாளம் காட்டுகிறேன்" என்பது மட்டும் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அவர் வழிகாட்ட காவல் வாகனத்தில் கோபி முத்தூட் பின்கார்ப் லிமிடெட் என்ற பேங்கினை எதிரியானவர் அடையாளம் காட்ட அங்கு சென்றோம். அங்கிருந்த மேலாளரிடம் விவரம் சொல்லியபோது அவர் 18/08/2022-ம் தேதியன்று பகல் 02.51 மணிக்கு 60.900 கிராம் எடையுள்ள தங்கத் தாலிக்கொடியை கடன் எண்.F.53745 ன் படி எதிரியானவர் ரூ.1,50,000/- ரூபாய்க்கு அடமானம் வைத்ததாக கூறி அந்த தங்க தாலிக்கொடியை எடுத்துக் காட்டியபோது எதிரி கார்த்திக் தான் அடமானம் வைத்த கொள்ளை அடித்த தாலிக்கொடி இதுதான் என அடையாளம் காட்டினார். பின்பு சாட்சிகள் பிரேம்குமார், கிருபாகரன் மற்றும் வங்கி மேலாளர் கலைச்செல்வி ஆகியோர் முன்னிலையில் 27/08/2022-ம் தேதி 14.00 மணிக்கு மேற்கண்ட வழக்கு சொத்தை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன்.

பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து சாட்சி விஜயகுமாரிக்கு தகவல் சொன்னதின் பேரில் அவர் காவல் நிலையம் வந்தும் 15.45 மணிக்கு வழக்குச் சொத்தை பார்வையிட்டு தன்னிடம் கொள்ளை போன தங்கத்தாலிக்கொடி இது தான் என காவல் நிலையத்தில் அடையாளம் காட்டினார். பின்னிட்டு சாட்சிகள் மேகலா, கோபால், பிரேம்குமார், கிருபாகரன் மற்றும் கலைச்செல்வி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து சாட்சி விஜயகுமாரியை மறு விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரியை நீதிமன்ற அடைப்புக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். தாலிக்கொடி கைப்பற்றப்பட்டதற்கான படிவம் 91 அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் 08/09/2022 ஆம் தேதியன்று காவல் உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து 13/09/2022-ம் தேதியன்று சட்ட பிரிவுகள் இதச 451, 392 ன் கீழ் நீதிமன்றத்தில் எதிரி கார்த்திக் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.07 07:06:49 +0530

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.07 07:06:57 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.